SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

JUNE - 2021

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0% Effort | 100% Results**


www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in


Available @Bookmark Store.


Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# ஜூன் – 2021

## கோவிட்–19 செய்திகள்

| | |
|---|---|
| **கார்பிவாக்ஸ் (Corbevax) கோவிட்-19 தடுப்பூசி** | ➢ **இது இந்தியாவின் உள்நாட்டு கோவிட்-19 தடுப்பூசி ஆகும், இது தற்போது 3வது கட்ட மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்பட்டுள்ளது.**<br>➢ **உருவாக்கிய அமைப்பு: இந்திய உயிர் மருந்தியல் நிறுவனமான பயோலாஜிக்கல் E. லிமிடெட் நிறுவனம், அமெரிக்காவின் ஹூஸ்டனில் உள்ள அமெரிக்கன் பேலர் மருத்துவக் கல்லூரி மற்றும் அமெரிக்க நிறுவனமான டைனவாக்ஸ் டெக்னாலஜிஸ்.** |
| **PanBio கோவிட்-19** | சிகாகோவில் உள்ள அபோட் விரைவு நோய் கண்டறியும் பிரிவினால் உருவாக்கப்பட்ட "PanBio COVID-19" எனப்படும் இரண்டாவது வீட்டிலேயே நோய் கண்டறியும் விரைவு ஆன்டிஜென் சோதனைக் கருவியை ICMR அமைப்பானது அங்கீகரித்துள்ளது. |
| **மாடர்னா கோவிட்-19 தடுப்பூசி** | இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஜெனரல் (DCGI) மும்பையைச் சேர்ந்த மருந்துப்பொருள் தயாரிப்பு நிறுவனமான சிப்லாவுக்கு மாடர்னாவின் கோவிட்-19 தடுப்பூசியை இறக்குமதி செய்ய அனுமதி அளித்துள்ளது; இது நாட்டின் நான்காவது தடுப்பூசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவசரகாலப் பயன்பாட்டு அங்கீகாரம் (EUA) வழங்கப்பட்டுள்ளது. |
| **2-DG வாய்வழியாகச் செலுத்தப்படும் தடுப்பூசி** | டாக்டர் ரெட்டி ஆய்வகமானது 2-டியோக்ஸி-டி-குளுக்கோஸ் (2-DG) என்ற மருந்தை வணிகரீதியாக அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. |
| **CoWIN** | CoWIN என்பது மின்னணு தடுப்பூசி நுண்ணறிவு வலையமைப்பான eVIN என்பதன் விரிவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும் . இது தடுப்பூசி வழங்குதல் தொடர்பான திட்டங்களின் நிகழ்நேர கருத்துக்களை சேகரிக்கப் பயன்படுகிறது. |
| **PRABANDH இணையவாயில்** | ➢ PRABANDH (PRoject Appraisal, Budgeting, Achievements and Data Handling System)<br>➢ பள்ளிகளில் கோவிட் பெருந்தொற்று காரணமாக அதிக அளவில் குழந்தைகளின் இடைநிற்றல் நிகழ்வதால், பள்ளி செல்லாமல் உள்ள குழந்தைகளைப் பற்றிய தகவல்கள் அடங்கிய ஒரு தகவல் தொகுப்பைத் தயாரிக்க மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. |
| **REGEN-COV2** | கடுமையாக பாதிக்கப்பட்ட சில கோவிட்-19 நோயாளிகளுக்கு வழங்கப்படும் உயிர் காக்கும் சிகிச்சை இங்கிலாந்தில் மருத்துவ சோதனை நிலையில் உள்ளது. |

| | |
|---|---|
| **பெண்சிங்கம் - கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இறந்ததாகக் கருதப்படும் உயிரினம்** | ➢ ஜூன் 19 அன்று வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் (AAZP) கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட 19 வயது சிங்கம் ஒன்று இறந்தது.<br>➢ இந்த உயிரியல் பூங்காவில் மேலும் ஒன்பது சிங்கங்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருப்பது சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டது. |
| **யுவ சக்தி கரோனா முக்தி அபியான்** | இளைஞர் சக்தியின் உதவியுடன் COVID 19 தொற்றுநோய் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மத்தியப் பிரதேச மாநில அரசானது ஒரு புதிய பிரச்சாரத்தைத் தொடங்குகியுள்ளது. |

## *தமிழ்நாடு*

1. **தமிழ்நாடு மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் புதிய நிர்வாகிகள்:**

| | |
|---|---|
| **J. ஜெயரஞ்சன்** | **வேளாண் கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவின் துணைத் தலைவர்** |
| **R. சீனிவாசன்** | திட்ட ஒருங்கிணைப்பு பிரிவின் முழுநேர உறுப்பினர் |
| **M. விஜயபாஸ்கர்** | கல்வி மற்றும் வேலைவாய்ப்பு |
| **K. தீனபந்து** | மாவட்ட திட்டமிடல் மற்றும் ஊரக வளர்ச்சி |
| **Dr. சுல்தான் அகமது இஸ்மாயில்** | நில பயன்பாடு திட்டமிடல் |
| **TRB. ராஜா** | விவசாயக் கொள்கை மற்றும் திட்டமிடல் |
| **மல்லிகா சீனிவாசன்** | தொழிற்துறை, ஆற்றல் மற்றும் போக்குவரத்து |
| **G. சிவராமன், நர்த்தகி நடராசன், Dr J அமலோற்பவநாதன்** | சுகாதாரம் மற்றும் சமூக நலப்பிரிவு |

2. 16வது தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் ஜூன் 21 ஆம் தேதி தொடங்கியது; தமிழ்நாடு பொருளாதார ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.



**Handpicked experts** | The Tamil Nadu government's Economic Advisory Council to the Chief Minister will have the following economic experts:

**Esther Duflo:** A joint winner of the 2019 Nobel Prize in Economics, she is a professor of poverty alleviation and development economics at MIT, U.S. She has worked extensively in India over the last two decades, including in Tamil Nadu, where her research focuses on improving the well-being of the elderly, the learning outcomes of primary and pre-primary children and maternal health

**Raghuram Rajan:** He is a Katherine Dusak Miller Distinguished Service Professor of Finance at the University of Chicago's Booth School. He was the Governor of the Reserve Bank of India between 2013 and 2016, vice-chairman of the Board of the Bank for International Settlements (2015-16) and chief economist at the International Monetary Fund (2003-2006)

**Arvind Subramanian:** He was the Chief Economic Adviser (CEA) to the Government of India between 2014 and 2018, and is now a senior fellow at Brown University's Watson Institute for International and Public Affairs and a distinguished senior fellow and professor at the Center for Global Development, Ashoka University

**Jean Drèze:** A development economist, he is currently a visiting professor at Ranchi University in India. His recent books include *An Uncertain Glory: India and Its Contradictions* (with Amartya Sen) and *Sense and Solidarity: Jholawala Economics for Everyone*

**S. Narayan:** A 1965-cadre IAS officer of the Tamil Nadu cadre, he was in public service till 2004. He was the Economic Adviser to the Prime Minister between 2003 and 2004. He is the author of *The Dravidian Years- Welfare and Politics in Tamil Nadu*

3. **A K ராஜன் குழு:** நீட் தேர்வில் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு குழுவாகும்.

4. **D முருகேசன் குழு:** பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம் மற்றும் சட்டம் போன்ற தொழில்முறை படிப்புகளில் அரசு பள்ளி மாணவர்களின் மோசமான சேர்க்கை நிலை குறித்து ஆய்வு செய்யும் ஒரு குழுவாகும்.

5. **காகர்லா உஷா குழு:** கரோனா பெருந்தொற்று காரணமாக மாநிலப் பாடத்தின் கீழ் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் அவர்களுக்கு மதிப்பெண்கள் நிர்ணயம் செய்வதற்கான அளவுகோல்களைத் தீர்மானிக்க தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையானது 'காகர்லா உஷா' என்பவரின் தலைமையின் கீழ் பத்து பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.

6. தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவராக **பீட்டர் அல்போன்ஸ்** நியமிக்கப்பட்டுள்ளார்.

7. தமிழகத்தின் புதிய டிஜிபியாக **C. சைலேந்திர பாபு** நியமிக்கப்பட்டுள்ளார்.

8. மிருதங்கம் நூலின் இசைச்சிறப்பு குறித்து எழுதியவர்: **கே. சிவராமன்**

9. தமிழ்நாடு பொது சுகாதார ஆய்வகமானது ஜூன் மாத இறுதிக்குள் மாநிலத்திற்கு 'மரபணு வரிசை ஆராய்ச்சி செய்யும் ஒரு ஆய்வகத்தை' அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

10. 2020-2021க்கான நீதி ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) குறியீட்டில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

11. கோவிட்-19 நோய்தொற்றை நிர்வகிப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான நிபுணர் குழுவிற்கு உதவுவதற்காக தமிழ்நாடு முன்னாள் **ஐஏஎஸ் அதிகாரி R.பூர்ணலிங்கம்** தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட பணிக்குழுவானது அமைக்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற 'செடி புட்டா' (Chedi Putta) என்ற கைத்தறி சேலைக்கு புவிசார் குறியீட்டுக்காக (GI) விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

13. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள காட்டூர் **"100% தடுப்பூசி பெற்ற தமிழ்நாட்டின் முதல் கிராமமாக மாறியுள்ளது".**

## தேசம்

1. **பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா- பீட் மாவட்ட மாதிரி:**

   ✓ மகாராஷ்டிரா மாநில அரசானது இந்தத் திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்த பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

   ✓ பீட் – மகாராஷ்டிராவின் வறட்சியான மராத்வாடா பகுதியில் அமைந்துள்ள ஒரு மாவட்டம்.

   ✓ 80-110 என்ற முறை இந்த மாதிரியில் பயன்படுத்தப்படுகிறது.

2. **கேரளா அறிவுத் திட்டம் (Kerala Knowledge Mission):**

   ✓ படித்த "அறிவு சார்ந்த வேலைவாய்ப்புகளை எதிர்நோக்கியிருக்கும் தொழிலாளர்களுக்கு" வேலைவாய்ப்பு வழங்குவதற்காக "கேரள அறிவுத் திட்டம்" என்ற முன்னெடுப்பைத் தொடங்குவதாக கேரள அரசானது அறிவித்துள்ளது.

3. **NATRAX – அதிவேகப் பாதை:** கனரகத் தொழில்கள் மற்றும் பொது நிறுவனங்களின் அமைச்சர், NATRAX என்னும் அதிவேகப் பாதையை மத்தியப் பிரதேசம் மாநிலத்தின் இந்தூரில் உள்ள பிதம்பூர் என்னும் இடத்தில் திறந்து வைத்தார்.

4. ஒடிசா மாநில அரசானது அதன் கடற்கரையோரத்தில் **சதுப்புநிலக் காடுகளை வளர்க்கத் திட்டமிட்டுள்ளது.**

5. ரேபிஸ் நோய் இல்லாத நாட்டின் முதல் மாநிலமாக **கோவா மாறியுள்ளது.**

6. கோவிட்-19 பெருந்தொற்று இருந்தபோதிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் (கிராமம்) இரண்டாம் நிலையில் 1249 கிராமங்கள் ODF Plus (திறந்தவெளி மலம் கழித்தலற்ற கிராமங்கள்) என அறிவிக்கப்பட்டு நிலையான முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

7. ஜம்மு-காஷ்மீரில் உள்ள பந்திபோரா மாவட்டத்தில் உள்ள வெயான் கிராமம், கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு எதிராக அனைத்து வயது வந்தோருக்கும் தடுப்பூசி போட்ட நாட்டின் முதல் கிராமமாக உருவெடுத்துள்ளது.

8. குஜராத் முதல்வர் வேளாண் பல்விரிவாக்கத் திட்டம் - 2021ஐ தொடங்கி வைத்தார்.
9. கோவிட்-19 நோய்த்தொற்று காரணமாக ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட குழந்தைகளுக்கு மத்திய அரசானது 'குழந்தைகளுக்கான சிறப்பு PM-CARES' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.
10. வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது தோட்டக்கலை விளைபொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு தோட்டக்கலை தொழிற்கொத்து மேம்பாட்டு திட்டத்தைத் (CDP) தொடங்கியுள்ளது.
11. சமீபத்தில், மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் சிந்து சிறந்த மெகா உணவு பூங்காவைத் (Indus Best Mega Food Park) திறந்து வைத்தார்.
12. இந்திய அரசு மூங்கில் பொருட்களின் சந்தைப்படுத்துதலுக்காக 'The Green Gold Collection' on the GeM (Government e-Marketplace) என்ற இணையவாயிலைத் தொடங்கியுள்ளது. **மூங்கில்: பச்சை தங்கம், ஏழை மனிதர்களுக்கான மரம் என்று அழைக்கப்படுகிறது.**
13. இளம் எழுத்தாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வழிகாட்டுதல் திட்டமான 'Young, Upcoming and Versatile Authors' (YUVA) திட்டத்தை இந்திய பிரதமர் அறிமுகப்படுத்தினார்.
14. இரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு (TCAS): உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பை (TCAS) இரயில்வேயானது அங்கீகரித்துள்ளது. மேலும் மத்திய அமைச்சரவையானது தகவல் தொடர்பு மற்றும் சமிக்ஞை அமைப்புகளை மேம்படுத்துவதற்காக இந்திய ரயில்வேக்கு **700 MHz** அலைவரிசையில் **5 MHz** அலைக்கற்றையை ஒதுக்க ஒப்புதல் அளித்தது.
15. சமீபத்தில், கர்நாடகா மற்றும் கேரளாவில் '**துளு**' மொழிக்கு அதிகாரப்பூர்வ மொழி அந்தஸ்து வழங்கவும் அதை அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்க்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
16. பெட்ரோலில் **"20% எத்தனால் கலந்த கலவை முறையை"** (E20 என்றும் அழைக்கப்படுகிறது) நடைமுறைப்படுத்துவதற்கான காலக்கெடுவை 2030லிருந்து 2025-ஆக மத்திய அரசு குறைத்துள்ளது.
17. மாநிலத்தால் வழங்கப்படும் அரசு நலத்திட்டங்களைப் பெறுவதற்கு, **'இரண்டு குழந்தைகள் கொள்கையை'** கட்டாயப்படுத்த அசாம் **மாநில அரசானது** முடிவு செய்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

1. ஐக்கியநாடுகள் சபை 2020-னை (2020 as International Year of Plant Health) "தாவர நலனுக்கான சர்வதேச ஆண்டாக" அறிவித்தது.

2. **சீனா தனது இரண்டு குழந்தை கொள்கையை தளர்த்தியது** மற்றும் தற்போது திருமணமான தம்பதியினருக்கு மூன்று குழந்தை வரை அனுமதிப்பதாக அறிவித்தது.

3. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100வது ஆண்டு விழாவில் சீனா சிவப்பு சுற்றுலாவை விளம்பரப்படுத்தி ஊக்குவித்தது.

4. திபெத்தின் தொலைதூர இமயமலை பகுதியில் சீனா முதல் மின்சார ரயிலை இயக்க உள்ளது.

5. துருக்கியில் உள்ள மர்மாரா கடலில் மிகப்பெரிய கடல் சளி (Sea snot-கடலில் சேரும் கழிவுகள் கசடு படலத்தை உருவாக்கும்) என்ற நிகழ்வு நிகழ்ந்தது.

6. 26/11 குற்றம் சாட்டப்பட்ட ஹபீஸ் சையித் மற்றும் ஜெய்ஷ் இ முகமது தலைவர் மசூத் அசார் போன்ற ஐ.நா.-வால் சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட பயங்கரவாதிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க தவறியதால், பாகிஸ்தானை மீண்டும் 'சாம்பல் பட்டியலில்' (Grey List) இருந்து நீக்க நிதிநடவடிக்கை பணிக்குழு (FATF) மறுத்துவிட்டது.

## பொருளாதாரம்

1. **மத்திய அரசாங்கம் இரண்டாவது கோவிட் அலைக்குப் பிறகு ரூ.6.28 லட்சம் கோடி நிவாரணத் தொகையை அளித்துள்ளது.**

   - ✓ நிவாரண செயல்பாடுகளில் சுகாதார பராமரிப்பு, சுற்றுலா, ஏற்றுமதி, வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்றவை இலக்கு பகுதிகளாகும்.
   - ✓ நிதியாண்டு 22-ற்கான இந்திய வளர்ச்சி கணிப்பை பல பொருளாதார வல்லுநர்கள் குறைத்த பிறகு மத்திய அரசு இந்த தொகுப்பு நிதியை அறிவித்தது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS




2. மத்திய அமெரிக்காவிலுள்ள ஒரு சிறிய கடலோர நாடான **எல் சல்வடோர் சட்டப்பூர்வ ஒப்பந்தமாக பிட்காயினை ஏற்றுக் கொண்ட உலகின் முதல் நாடாக உருவாகியுள்ளது**.

3. உலகின் மிகப்பெரிய **கிரிப்டோ** நாணய பரிமாற்றங்களில் ஒன்றாக **பினான்ஸை (Binance)** பிரிட்டன் தடை செய்கிறது.

4. உலக வங்கி தனது உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது 2021-22ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) எனும் பொருளாதார வளர்ச்சியானது 8.3%-ஆக இருக்கும் என கணித்துள்ளது.

5. உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (ஜூன் 5), உத்தரகாண்ட், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிடுகையில் மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தியைக் (GEP) கணக்கில் எடுத்துக்கொண்ட இந்தியாவில் முதல் மாநிலமானது.

6. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அனைத்து கடன் வழங்குபவர்களுக்கும் ஒரே மாதிரியான வழிகாட்டுதல்களுடன் நுண்நிதிக்கான (Microfinance) புதிய ஒழுங்குமுறை அமைப்பை முன் மொழிந்துள்ளது.

## *விளையாட்டு*

1. இந்திய தடகள வீரர் **மில்காசிங் கோவிட்-19** தொற்று பாதிப்பால் இறந்தார். இவர் காமன்வெல்த் விளையாட்டில் முதல் தங்கப் பதக்கம் வென்றார் மற்றும் 1959-ல் பத்மஸ்ரீ விருது பெற்றார்.

2. இங்கிலாந்தின் சவுதாம்ப்டனில் நடந்த உலக டெஸ்ட் சம்பியன் பட்டத்தை நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி வென்றது.

3. துனிசியாவின் ஒன்ஸ்ஜேபூர் (Onsjabeur) WTA பட்டத்தை வென்ற **"முதல் அரபு பெண்"**.

## திட்டங்கள் / யோஜனாக்கள்

| திட்டங்கள் / யோஜனாக்கள் | நோக்கங்கள் / ஏன் செய்தியில்? | அமைச்சகம் / அமைச்சரவை / மாநிலம் |
|---|---|---|
| **ஒருங்கிணைந்த மின்சக்தி மேம்பாட்டு திட்டம் (IPDS)** | ➢ 50 KWP சூரிய மின் உற்பத்தி கூரை திட்டம்<br>➢ இத்திட்டம் நகர்ப்புற விநியோக திட்டத்தின் கீழ் வரும் 'பசுமையை நோக்கி செல்' எனும் முயற்சியை மேலும் வலுப்படுத்துகிறது. | இமாச்சல பிரதேசம் |

## மாநாடுகள் & கருத்தரங்குகள்

| மாநாடுகள் / கருத்தரங்குகள் | நோக்கங்கள் / கருத்துரு / வெளியீடு | இடம் / நிகழ்த்தியவர் |
|---|---|---|
| **47-வது ஜி7 உச்சி மாநாடு** | இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியா உச்சி மாநாட்டில் பங்கேற்க 'விருந்தினர் நாடுகளாக' அழைக்கப்பட்டன. | ஐக்கிய இராச்சியம் (UK) நடத்தியது. |
| **அரேபி-இந்திய ஆற்றல் மன்றம்** | இம்மன்றமானது ஆற்றல் மாற்றம், பிராந்தியங்களுக்கிடையேயான மின்சக்தி வர்த்தகம், ஹைட்ரோகார்பன்கள் மற்றும் அணுசக்தி உற்பத்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பின் சாத்தியங்கள் மற்றும் சவால்களை ஆராய்ந்தது. | இந்தியா மற்றும் மொராக்கோவின் தலைமையில் நடைபெற்றது. |
| **ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு பிளஸ் (ADMM Plus)** | இது 10 ஆசியான் நாடுகள் மற்றும் எட்டு உரையாடல் / பேச்சுவார்த்தை நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் வருடாந்திர கூட்டம் | புரூனே |
| **வடஅட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO) உச்சி மாநாடு** | "நேட்டோ 2030" கோரிக்கை இந்த கோரிக்கையானது எதிர்கால சவால்களை எதிர்கொள்ள கூட்டணி தயாராக உள்ளது என்பதை உறுதி செய்வதை விரிவான நோக்கமாகக் கொண்டுள்ளது. | புரூஸெல்ஸ், பெல்ஜியம் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

# பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறை

| பாதுகாப்பு மற்றும் விண்வெளி | நோக்கம் | நாடு / மாநிலம் / அமைப்பு |
|---|---|---|
| **அக்னி-பி (Prime) (Agni-P)** | ➢ புதிய தலைமுறை அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணை அக்னி-பி (Prime) ஆகும்.<br>➢ அக்னி -பி என்பது அக்னி அணு ஆயுதங்களின் வரிசையில் புதிய தலைமுறை அணு ஆயுத ஏவுகணை ஆகும் (IGMDP - ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுகிறது).<br>➢ இது 1,000 முதல் 2,000 கிமீ தூரம் வரை பயணிக்கும் திறனை இந்த ஏவுகணை பெற்றுள்ளது. | பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) |
| **கடல் பறவை திட்டம் (Project Sea Bird)** | கடல் பறவை திட்டம் என்பது கடற்படை உள்கட்டமைப்பு திட்டமாகும் இது கடற்படைக்கு உதவுதல் மற்றும் போர்க்கப்பல்களை பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒரு கடற்படை தளத்தை நிர்மாணிப்பதை உள்ளடக்கியுள்ளது. | இந்திய கடற்படை |
| **ஜம்மு விமான நிலையத்தில் ட்ரோன் பயங்கரவாத தாக்குதல்** | ஜம்முவில் உள்ள இந்திய விமானப்படை (IAF) தளம் இரண்டு குறைந்த தீவிரம் கொண்ட மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்களை (IEDs) பயன்படுத்தி தாக்கப்பட்டது. இந்த IED-கள் இரண்டு ட்ரோன்களிலிருந்து வீழ்த்தப்பட்டன. | |
| **இந்திராஜால் (INDRAJAAL)** | ஹைதராபாத்தைச் சேர்ந்த க்ரீன் ரோபாட்டிக்ஸ் ஆளில்லா விமானங்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் இந்தியாவின் முதல் உள்நாட்டு பாதுகாப்பு அமைப்பு - 'இந்திராஜால்' ஆகும். | |
| **INS சந்தயக்** | ஹைட்ரோ கிராபிக் அளவீடுகளை மேற்கொண்டு கடற்படையில் 40 ஆண்டு காலமாக பயன்பாட்டில் இருந்த ஐஎன்எஸ் சந்தயக் போர்க்கப்பல் விடுவிக்கப்பட்டது. ஐஎன்எஸ் சந்தயக் என்ற போர்க்கப்பல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு கடந்த 1981-ஆம் ஆண்டு கடற்படையில் இணைக்கப்பட்டது. | |
| **வானக லேசர் (Airbone Laser)** | ஆளில்லா விமானங்களை நடுவானில் சுட்டு வீழ்த்தக்கூடிய லேசரை இஸ்ரேல் வெற்றிகரமாக சோதித்தது. | இஸ்ரேல் |
| **மவ்யா சூடான்** | IAF-ல் சேர்க்கப்பட்ட 12-வது பெண் போர் விமானி மாவ்யா சூடான் ஆவார். | |

## இராணுவப் பயிற்சி

| பயிற்சி | பங்கேற்ற நாடுகள் |
|---|---|
| **IN-EUNAVFOR கடற்படை கூட்டு இராணுவப் பயிற்சி** | இந்திய கடற்படை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கடற்படையின் முதலாவது கூட்டுப் பயிற்சி ஆகும். |
| **PASSEX** | இந்தியா மற்றும் அமெரிக்கா கடற்படைக்கு இடையேயான கூட்டுப்பயிற்சியாகும். |
| **Sea breeze பயிற்சி** | உக்ரைன் மற்றும் அமெரிக்க கடற்படைகளுக்கிடையேயான பயிற்சியாகும். |
| **CORPAT** | இந்தியா மற்றும் தாய்லாந்துக்கிடையேயான கடற்படை பயிற்சியாகும். |

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| புதிய கண்டுபிடிப்புகள் | நோக்கம் | இடம் / தயாரிப்பு |
|---|---|---|
| **உலகின் முதல் மர செயற்கைக் கோள்** | ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) உலகின் முதல் மர செயற்கைக் கோளான WISA Wood Sat-2021-ஆம் ஆண்டின் இறுதிக்குள் புவியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளது. | ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) |
| **வெள்ளி கிரகத்திற்கான En Vision திட்டம்** | இத்திட்டமானது கோளின் வளிமண்டலம் மற்றும் மேற்பரப்பை ஆராயவும், வளிமண்டலத்திலுள்ள வாயுக்களைக் கண்காணிக்கவும் மற்றும் அதன் மேற்பரப்பு அமைப்பை பகுப்பாய்வு செய்ய பல்வேறு கருவிகளைக் கொண்டிருக்கும். | ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) |
| **சைபர் – 2 (CIBER-2)** | சைபர் – 2 திட்டத்தின் நோக்கம் நட்சத்திரங்களின் எண்ணிக்கையில் தவறவிட்ட கூடுதல் நட்சத்திரங்களின் ஆதாரங்களைத் தேடுவதாகும். | தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாக அமைப்பு (நாசா) |
| **செயற்கை சூரியன்** | மேம்பட்ட சோதனை ரீதியிலான டோகாமாக் (EAST) ஆனது 288 மில்லியன் டிகிரி பாரன் ஹீட் உச்ச வெப்பநிலையை அடைந்தது. இது சூரியனை விட பத்து மடங்கு அதிக வெப்பம் கொண்டதாகும். | சீனா |
| **Ambi Tag** | அழுகும் பொருட்கள், தடுப்பூசிகள் மற்றும் உடல் உறுப்புகள் இரத்தத்தினை போக்குவரத்தில் எடுத்துச் செல்கையில் நிகழ் நேர சுற்றுப்புற வெப்பநிலையை இது பதிவு செய்யும். | இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ரோப்பர் |

| | | |
|---|---|---|
| **உலகில் முதல் மரபணு மாற்றப்பட்ட (GM) இரப்பர் தாவரம்** | மரபணு மாற்ற (GM) தொழில்நுட்ப ஆய்வக தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உயிரினங்களுக்கிடையில் குறிப்பிட்ட பண்புகளுக்கான மரபணுக்களை மாற்ற அனுமதிக்கிறது. | அசாம் |
| **"Five to 50" சேவை** | ஒண்வெப் அமைப்பானது 36 செயற்கைக் கோள்களின் அடுத்த குழுமத்தினை விண்ணில் செலுத்தியுள்ளது. "Five to 50" சேவையின் நோக்கம் 50 டிகிரி அட்ச ரேகையின் வடக்கேயுள்ள அனைத்து பகுதிகளுக்கும் இணைய சேவை வழங்குவதாகும். | |
| **வெள்ளி கிரகத்திற்கான இரண்டு திட்டங்கள்** | இரண்டு திட்டங்கள்:<br>➢ டாவின்சி + (வெள்ளிகிரகத்தின் நல்லியல்பு வாயு, வேதியியல் பற்றிய ஆழ் வளிமண்டல ஆய்வு மற்றும் புகைப்படமிடல்)<br>➢ வெரிட்டாஸ் (வெள்ளி கிரகத்தின் உமிழ்வுத்திறன், ரேடியோ அறிவியல் InSAR, நில அமைப்பு மற்றும் நிறப்பிரிகை பற்றிய ஆய்வு | நாசா |
| **வஜ்ர கவசம்** | இது ஒரு எளிய தொற்று நீக்க இயந்திரமாகும். முன்களப் பணியாளர்கள் பயன்படுத்தும் முகக்கவசம் மற்றும் பாதுகாப்பு கவச உடைகளில் உள்ள தொற்றுகிருமிகளை நீக்குகிறது. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST) தொடங்கப்பட்ட நிதி பிரயாஸ் திட்டத்தின் கீழ் இந்த தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. |
| **எபோலா பெருந்தொற்று** | கினியாவில் பிப்ரவரி 2021-ல் துவங்கிய எபோலா பெருந்தொற்றானது தற்போது முடிவுற்றது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. | கினியா |
| **$H_{10}N_3$ பறவைக் காய்ச்சல்** | ஜியாங்சு மாகாணத்தில் $H_{10}N_3$ பறவைக் காய்ச்சல் கிருமியின் முதல் மனித தொற்று கண்டறியப்பட்டுள்ளது. | சீனா |
| **ஷென்சோ – 12** | ➢ சீனாவின் புதிய விண்வெளி நிலையமான தியான்ஹே – 1ற்கு மூன்று பேர் கொண்டு குழுவினரை சுமந்து செல்லும் விண்களம் "ஷென்சோ – 12"<br>➢ இது விண்வெளி நிலையத்திற்கு முக்கிய பொருட்களை கொண்டு சென்ற தியான்சோ – 2 சரக்கு விண்கலம் ஏவப்பட்ட பிறகு முடிவெடுக்கப்பட்ட திட்டம் | சீனா |

| | | |
|---|---|---|
| **ஃபெங்யுன் – 4B (Fengyun – 4B)** | லாங்மார்ச் 3பி ராக்கெட் மூலம் சீனா ஃபெங்யுன் – 4B என்ற வானிலை செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது. | சீனா |
| **கூடங்குளம் அணுமின் சக்தி உலை** | ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசடோம்பேகன் இந்தியாவில் கூடங்குளம் அணுமின் நிலைய அலகு – 5-னை இந்திய அணுசக்தி கழகத்துடன் NPCIL இணைந்து கட்டுகிறது. | |
| **ஜீவன் வாயு** | ➢ தொடர் நேர்மறை காற்றழுத்த இயந்திரத்திற்கு (CPAP) மாற்றாக<br>➢ மின்சாரம் இல்லாமல் செயல்படும் முதல் சாதனம் மற்றும் ஆக்சிஜன் உருளைகள் மற்றும் ஆக்சிஜன் குழாய்கள் என இரண்டு வகை உற்பத்தி அலகுகளுடன் மருத்துவமனையில் செயல்பட முடியும். | இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் - ரோப்பர் |

## *சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்*

| உயிரினங்கள் / சுற்றுச் சூழல் | வகைகள் / நோக்கம் | இடம் / நிகழ்த்தியவர்கள் |
|---|---|---|
| **டெஹிங் பட்காய் தேசிய பூங்கா / ஜெய்பூர் மழைக்காடுகள்** | ✓ அசாமின் 7வது தேசிய பூங்கா<br>✓ டிக்பாயில் உள்ள ஆசியாவின் பழமையான சுத்திகரிப்பு நிலையம் மற்றும் லிடோவில் 'திறந்தவெளி' நிலக்கரி சுரங்கம் ஆகியவை சரணாலயத்திற்கு அருகில் அமைந்துள்ளன. | அசாம் |
| **ரைமோனா தேசிய பூங்கா** | அசாமின் 6வது தேசிய பூங்கா | அசாம் |
| **ராம்கர் விஸ்தாரி வனவிலங்கு சரணாலயம்** | ராஜஸ்தானின் 4வது புலிகள் பாதுகாப்பகம் | ராஜஸ்தான் |
| **ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் பாதுகாப்பகம்** | வைகையின் முதன்மை நீர்பிடிப்பு பகுதியான மேகமலைக்கு பாதுகாப்பு வழங்கவும் மற்றும் இதையொட்டி ஆற்றில் நீர் மட்டம் உயரவும் உதவுகிறது. | தமிழ்நாடு |
| **இந்து குஷ் இமயமலை (HKH)** | ✓ இந்து குஷ் இமயமலை (HKH) மலைத்தொடர்கள் 2100க்குள் அதன் பனியில் | UNDP |

| | | |
|---|---|---|
| | மூன்றில் ஒரு பகுதியை இழக்கக்கூடும்.<br>✓ 2100க்குள் சுமார் 2 பில்லியன் மக்கள் உணவு, தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும். | |
| **"ஆபரேஷன் ஒலிவியா"** | ஆலிவ் ரிட்லி ஆமைகளை பாதுகாக்கும் திட்டம் ஆகும் | இந்திய கடலோர காவல்படை |
| **பெரும் தடுப்புப் பவளத்திட்டு (Great barrier Reef)** | யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழு ஆஸ்திரேலியாவின் பெரும் தடுப்புப் பவளத்திட்டினை "ஆபத்தான" உலக பாரம்பரிய தளங்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. | |
| **உலகின் இரண்டாவது பெரிய நீர் மின் அணை ஆகும்.** | ✓ பைஹெட்டன் அணை<br>✓ யாங்சே ஆசியாவின் மிக நீளமான நதி ஆகும் இதன் துணை நதியான ஜின்ஷா ஆற்றில் உள்ளது.<br>✓ இது மொத்தம் 16,000 மெகாவாட் நிறுவப்பட்ட திறனுடன் கட்டப்பட்டுள்ளது. | சீனா |
| **கங்கை டால்பின்** | ஊரடங்கு காலங்களில் சம்பல் ஆற்றில் கங்கை டால்பின்கள் மற்றும் கரியல் முதலைகளின் மக்கள் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது. | மத்தியப் பிரதேசம் |
| **தெற்கு பெருங்கடல்** | நேஷனல் ஜியோகிரா:பிக் சொசைட்டி தென் கடலை "உலகின் 5வது பெருங்கடல்" என்று அங்கீகரித்துள்ளது. | தேசிய புவியியல் கழகம் |
| **"டிராகன் மேன்" மண்டை ஓடு** | விஞ்ஞானிகள் 140,000 ஆண்டுகள் பழமையான புதைபடிவ மண்டையோட்டை கண்டுபிடித்துள்ளனர் இது பழங்கால மனிதனின் புதிய இனமாகும். | சீனா |
| **தோட்டக்கலை குழு மேம்பாட்டுத் திட்டம் (CDP)** | தோட்டக்கலையின் வளர்ச்சியை உறுதி செய்கிறது. | மத்திய வேளாண்துறை அமைச்சர் |
| **Yellow Gold 48** | முதல் மஞ்சள் நிற தர்பூசணி வகை | ஜெர்மனி |

## அறிக்கைகள் / குறியீடுகள்

| அறிக்கைகள் | தரநிலை |
|---|---|
| **உலக சிறந்த வாழுமிடத்திற்கான குறியீடு** | முதல் தரநிலை: ஆக்லாந்து (நியூசிலாந்து) |
| **உலக போட்டித்திறன் குறியீடு** | இந்தியாவின் தரநிலை: 43வது இடம் |
| **உலக இணைய பாதுகாப்பிற்கான குறியீடு** | இந்தியாவின் தரநிலை: 10வது இடம் |
| **உலகின் தாராள மனப்பான்மை (World giving Index) கொண்ட நாடுகளின் பட்டியல்** | இந்தியாவின் தரநிலை: 14வது இடம் |

## செய்திகளில் இடம்பெற்ற நியமனங்கள் மற்றும் முக்கிய நபர்கள்

| நபர்கள் | நிலை / பதவி |
|---|---|
| **மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா ஷாஹித்** | ஐக்கிய நாடுகள் சபையின் 76வது அமர்வின் தலைவர் (GA) |
| **ஆன்டோனியோ குட்டெரெஸ்** | ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆன்டோனியோ குட்ரெஸை ஒன்பதாவது ஐ.நா. பொதுச் செயலாளராக (UNSG) இரண்டாவது முறை நியமித்தது. |
| **K.K. வேணுகோபால் - இந்தியாவின் அட்டர்னி ஜெனரல்** | மத்திய அரசு அவரது பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது. |
| **நாப்தலி பென்னட்** | இஸ்ரேலின் புதிய பிரதமர் |
| **ரெபேக்கா கிரின்ஸ்பான்** | ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டின் பொதுச் செயலாளர் (UNCTAD). |

## புவிசார் குறியீடு (GI Tag)

| புவிசார் குறியீடு | நாடு |
|---|---|
| **ஜல்கான் வாழைப்பழம்** | மகாராஷ்டிரா |

## செயலிகள் & தளம்

| செயலிகள் & தளம் |
|---|
| **Itat E-dwar தளம்:** மத்திய அரசு வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் இ-தாக்கல் தளத்தை **'itat – e-dwar'** என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. |

## விருதுகள்

| விருதுகள் | விருது பெரும் நபர் / அமைப்பு |
|---|---|
| ஃபுகுவோகா பரிசு 2021 (Fukuoka Prize) | **P.** சாய்நாத் |
| இந்திய ஸ்மார்ட் சிட்டி விருதுகள் (ISCA) 2020 | உத்தரப்பிரதேசம் அனைத்து மாநிலங்களில் முதலிடத்திலும், அதை தொடர்ந்து மத்திய பிரதேசம் மற்றும் தமிழகமும் உள்ளது. |
| | இந்தூர் (மத்தியப் பிரதேசம்) மற்றும் சூரத் (குஜராத்) ஆகியவை ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக விருதை வென்றன. |
| | அகமதாபாத் 'ஸ்மார்ட் சிட்டிஸ் லீடர்ஷிப் விருது' மற்றும் சண்டிகர், யூனியன் பிரதேசங்களுக்கான விருது, இந்தூர் "புதுமை ஐடியா விருதினை" வென்றது. |

## முக்கிய தினங்கள்

| நாள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **ஜூன் 1** | உலக பால் தினம் | **கருத்துரு:** "focus on Sustainability in the dairy sector" |
| **ஜூன் 7** | உலக உணவு பாதுகாப்பு நாள் | **கருத்துரு:** "Safe Food for a Healthy Tomorrow" |
| **ஜூன் 8** | உலகப் பெருங்கடல் தினம் | **கருத்துரு:** "The Ocean: Life and Livelihoods" |
| **ஜூன் 12** | உலக குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான தினம் | **கருத்துரு:** "Act Now: End Child Labour" |
| **ஜூன் 17** | பாலைவனமாதல், வறட்சிக்கு எதிரான நாள் | **கருத்துரு:** "Restoration. Land. Recovery. We build back better with healthy land" |
| **ஜூன் 19** | உலக அரிவாள் சொல் சோகை தினம் | |

| | | |
|---|---|---|
| **ஜூன் 21** | சர்வதேச யோகா தினம் | **கருத்துரு**: "Yoga for wellness" |
| **ஜூன் 23** | சர்வதேச ஒலிம்பிக் தினம் | **கருத்துரு**: "Stay healthy, stay strong, stay active with the #OlympicDay workout" |
| **ஜூன் 25** | சர்வதேச மாலுமிகள் தினம் | **கருத்துரு**: "Seafarers: at the core of shipping's future" |
| **ஜூன் 26** | போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச நாள் | |
| **ஜூன் 27** | சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) நாள் | கருத்துரு: "MSME 2021: Key to an inclusive and sustainable Recovery" |
| **ஜூன் 29** | தேசிய புள்ளியியல் நாள் | **கருத்துரு**: "Sustainable Development Goal (SDG)- 2 (End Hunger, Achieve Food Security and Improved Nutrition and Promote Sustainable Agriculture)" |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS